கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 15.03.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவிகளுக்கு மலபார் சேரிடபில் டிரஸ்ட் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பாட பிரிவில் பயிலும் மாணவிகளுக்கும், அரசு கல்லூரி மற்றும் அரசு பள்ளி மாணவிகளுக்கும் மலபார் சேரிடபில் டிரஸ்ட் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வளாகத்திலுள்ள அண்ணா அரங்கத்தில் 13.03.2024 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழத்தின் துணைவேந்தர் முனைவர் V.கீதாலட்சுமி, பதிவாளர் முனைவர் R.தமிழ்வேந்தன், முதன்மையர் (வேளாண்மை) முனைவர் N.வெங்கடேசபழனிச்சாமி, கல்வி உதவித்தொகை ஒருங்கிணைப்பு அதிகாரி முனைவர் P.G.கவிதா மற்றும் தமிழ்நாடு மேற்கு மண்டல தலைவர், மலபார் கோல்டு அண்ட டைமண்ட்ஸ் திரு.நௌஷாத் ஆகியோர் விழாவினை குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர்.

கோயம்புத்தூர் மலபார் கோல்டு அண்ட டைமண்ட்ஸ் வர்த்தக மேலாளர் திரு.C.தேவராஜ் அவர்கள், கூட்டத்தினரை வரவேற்றார். முதன்மையர் (வேளாண்மை), முனைவர் N.வெங்கடேசபழனிச்சாமி அவர்கள், தனது வாழ்த்துரையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயங்கி வரும் ஒருங்கிணைப்பு கல்வி உதவித் தொகை மையமானது பொருளாதார ரீதியாக பின் தங்கிய, மாற்றுத்திறனாளி மாணவ மாணவிகளுக்கும் மற்றும் ஒற்றைபெற்றோர் உள்ள மாணவ மாணவிகளுக்கும் பல்வேறு தொண்டு நிறுவனங்களின் மூலம் கல்வி உதவித்தொகை ஏற்பாடு செய்து வருவதாகவும் தற்போது மலாபர் கோல்டுஅண்ட் டைமண்ட்ஸ் நிறுவனத்தின் மூலம் 46 மாணவிகளுக்கு கல்வி உதவிதொகை இவ்விழாவின் மூலம் வழங்கப்பட உள்ளதாகவும் கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் R.தமிழ்வேந்தன் அவர்கள், மலாபர் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் நிறுவனம் மூலம் மாணவிகளுக்கு கல்வி உதவிதொகை வழங்குவது மிகவும் பெருமை கொள்ள வேண்டிய விஷயமாகும் எனவும், இந்நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகளும் மற்றும் அரசு பள்ளி மாணவிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவிகளும் பயனடைகிறார்கள் எனவும் தெரிவித்தார். மேலும், அவர் பெண்களுக்கு பொன் செல்வத்தை வழங்குவதை விட கல்விக்காக உதவித்தொகை வழங்கப்படுவது அவர்களது வாழ்விற்கு நிரந்தரமான செல்வம் எனவும் தொவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் V.கீதாலட்சுமி அவர்கள் விழாவின் தலைமை உரையில் மலாபர் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் நிறுவனம் நடத்தும் பல்வேறு நலத்திட்டங்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். இக்கல்வி உதவித்தொகை திட்டத்தின் மூலம் சுமார் 750 மாணவிகள் பயனடைந்துள்ளனர் என்று கூறினார். ஒரு பெண்ணுக்கு கல்வி அளித்தால் அந்த குடும்பமே உயர்வடையும் என்று கூறி இத்திட்டம் மேலும் வளர தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேலும், மலபார் கோல்டு அண்ட டைமண்ட்ஸ் நிறுவன ஊழியர்கள் மற்றும் அந்நிறுவனத்தினால் பயன்பெற்ற பள்ளி தலைமையாசிரியர் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்ச்சியின் இறுதியில் பல்கலைக்கழகத்தின் கல்வி உதவித்தொகை ஒருங்கிணைப்பு அதிகாரி முனைவர் P.G.கவிதா, தனது நன்றியுரையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒருங்கிணைப்பு கல்வி உதவித் தொகை மையத்தின் மூலம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு தொண்டு நிறுவனங்களின் மூலமாக உதவித்தொகை பெற்றுப் பயனடைந்துள்ளதாக தெரிவித்தார். கல்வி தொகை வழங்கிய மலபார் சேரிடபில் டிரஸ்ட் நிறுவனத்திற்கும் ஊன்று கோலாக இருந்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கும் நன்றி கூறினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***